රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

මගේ අංකය எனது இல My No	R/පොදු/1	ඔබේ අංකය உமது இல Your No		දිනය திகதி Date	2020.03.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள் அனைவருக்கும்

வருடாந்த இடமாற்றம் அல்லது சாதாரண இடமாற்றம் பெற்று 2020 மார்ச் மாதத்தினுள் புதிய சேவை நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்களுக்கும் 2018.08.20 ஆம் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் பெற்று ஒரு வருட காலப் பயிற்சியை முடித்துள்ள பட்டதாரிகளுக்கும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III மற்றும் வகுப்பு 2 இன் தரம் II இற்கு புதிதாக நியமனம் பெற்ற (2020.03.16 ஆம் திகதி முதல் செல்லுபடியாகும் விதத்தில் நியமனம் பெற்ற) உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் செலுத்துதல்

தற்போது நாட்டில் நிலவும் நிலைமையைக் கவனத்திற் கொண்டு பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளுக்குச் சம்பளங்களைச் செலுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

1. வருடாந்த இடமாற்றம் அல்லது சாதாரண இடமாற்றம் பெற்று 2020 மார்ச் மாதத்தில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்குச் சமுகமளித்த/ சமுகமளிப்பதற்காக முன்னைய சேவை நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, எனினும் இது வரையில் தங்களுக்குரிய சம்பளத்தைப் பெறாத உத்தியோகத்தர்கள்
2. 2018.08.20 ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்று ஒரு வருட காலப் பயிற்சியைப் பூர்த்தி செய்து முறையான நியமனம் வழங்கப்பட்டுள்ள, எனினும் 2020.03.16 ஆம் திகதி வரையில் புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்கள் மற்றும் 2020.03.16 ஆம் திகதிக்கு முன்னர் கடமைகளைப் பொறுப்பேற்ற போதிலும் இது வரையில் சம்பளம் பெற்றிராத உத்தியோகத்தர்கள்
3. 2018.08.20 ஆம் திகதி முதல் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்று ஒரு வருடப் பயிற்சியைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயங்களின் அடிப்படையில் முறையான நியமனம் வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் 2020.02.27 ஆம் திகதி பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய பட்டதாரிப் பயிலுநர் உத்தியோகத்தர்கள்
4. இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்கு மற்றும் வகுப்பு 2 இன் தரம் II இற்கு 2020.03.16 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்ட, அவ்வாறு நியமிக்கும் சந்தர்ப்பத்திலும் அரச சேவையில் ஏதேனும் பதவிகளில் பணிபுரிந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மேலே குறிப்பிட்ட இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்குரிய பதவிகளைப் பொறுப்பேற்பதற்காக ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்

දුරකතන தொலைபேசி Telephone 011-2696211-13 011-2166000 | ෆැක්ස් தொலைநகல் Fax 011-2695279 | ඊ-මේල් மின்னஞ்சல் E-mail info@pubad.gov.lk | ලිපිනය முகவரி Address නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකා. சுதந்திரச் சதுக்கம் கொழும்பு 07 இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka.
වෙබ් අඩවිය/ வெப்தளம் /Website: www.pubad.gov.lk

02. மேலே 1, 2, 3 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் அனைத்துக்கும் மார்ச் மற்றும் ஏப்பிரல் மாதங்களுக்கான பயிலுநர் கொடுப்பனவுகளை அல்லது சம்பளங்களை மேற்படி உத்தியோகத்தர் வகுதியினர் இது வரையில் சேவையாற்றிய அல்லது பயிற்சி பெற்ற நிலையங்களிலேயே செலுத்துமாறு பணிவுடன் அறியத் தருகிறேன்.

03. உத்தியோகத்தர்கள் முறையாக கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் தங்களது முன்னைய சேவை நிலையத்தில் பெற்றுக் கொண்ட சம்பள விபரங்களைப் புதிய சேவை நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் மிகைக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருமிடத்து உத்தியோகத்தரிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எஸ். ஹேட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு